**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.83** **நாள் : 12.07.2017**

## பொதுசுகாதார கல்வித்துறை சார்பாக அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சிறப்பு தூய்மைப் பணி முகாம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதார கல்வித்துறை சார்பாக அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சிறப்பு தூய்மைப் பணி முகாம் இன்று (12.07.2017) நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி, பொதுசுகாதார கல்வித்துறை சார்பாக குப்பைகளை மட்கும், மட்காத குப்பை என்று வகைப்பிரித்து அளித்தல் மற்றும் ஸ்வாச்சதா செயலியை பதிவிறக்கம் செய்தல் போன்றவை சம்பந்தமாக பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் கல்வி நிறுவனங்கள், குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட சிட்கோ நிர்வாக அலுவலகத்தில் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக வீடுகள், கடைகள், தொழிற் நிறுவனங்கள் போன்ற இடங்களில் சேரும் குப்பைகளை மட்கும், மட்காத குப்பைகள் என்று வகைப்பிரித்து **(நீலநிறக் கூடையில் போடவேண்டிய குப்பைகள்:** பிளாஸ்டிக் கவர்கள், பாட்டில்கள், பெட்டிகள், சிப்ஸ் மற்றும் மிட்டாய்களின் கவர்கள், பிளாஸ்டிக் கப்புகள், பால்/தயிர் பாக்கெட் கவர்கள், செய்தித்தாள்கள், வாரமலர் மற்றும் மாதந்திர புத்தகங்கள், எழுதப் பயன்படுத்திய காகிதம் மற்றும் நோட்டு புத்தகங்கள், பீட்சா உணவுப் பெட்டிகள், குளிர்பான டெட்ரா பெட்டிகள், காகித கப்புகள், தட்டுகள், உலோக மெருகூட்டப்பட்ட தாள், உலோகக் குவளைகள், ரப்பர், தெர்மாகோல், பழைய தரை துடைப்பான்கள், அழகு சாதனப் பொருட்கள், முடி, தேங்காய் சிரட்டை, **பச்சை நிறக்கூடையில் போடவேண்டிய குப்பைகள்:** காய்கறிகள் மற்றும் பழங்களின் தோல்கள், சமைத்த உணவுகள்/மீதமான உணவுகள், முட்டை ஓடுகள், கோழி/மீன் மாமிசங்களின் எலும்புகள், அழுகிய காய்கறிகள்/பழங்கள், தேநீர் பைகள்/காபி அரை, இலைத் தட்டுகள், உதிர்ந்த இலைதளைகள், பூஜை செய்த மலர்கள்/மாலைகள், களைச் செடிகள்) அளித்தலின் முக்கியத்துவம், தூய்மை இந்தியா திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒவ்வொருவரின் பங்கு குறித்து விளக்கப்பட்டன. மேலும், மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஸ்வாச்சதா செயலியை பதிவிறக்கம் செய்யும் முறை குறித்தும், அதன் மூலம் குப்பைகளை அகற்றப்படாமல் இருத்தல், பொதுக் கழிவறைகளில் தண்ணீர் வராமல் இருத்தல்,

மின் விளக்கு எரியாமல் இருத்தல், தூய்மைப்படுத்தப்படாமல் இருத்தல் முதலியன குறித்து படத்துடன் கூடிய பதிவேற்றத்துடன் புகார் அளித்தால், 12 மணி நேரத்திற்குள் உரிய கோட்ட துப்புரவு ஆய்வாளரால் அப்புகாரானது நிவர்த்தி செய்யப்படும் என்பது குறித்தும் விளக்கப்பட்டது.

இம்முகாமில் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் CAAIIUC நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள், தன்னார்வ தொண்டர்கள் மற்றும் பணியாளர்கள் சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். அனைவரும் ஸ்வாச்சதா செயலியை பதிவிறக்கம் செய்வதாக கூறி, குப்பைகளை வகைப்பிரித்தலுக்கான தூய்மை இந்தியா திட்ட உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். பின்னர், விழிப்புணர்வு பதாகைகளுடன் கூடிய பேரணியும் நடைபெற்றது. அனைவரும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியிலுள்ள முதல் மெயின் சாலை, இரண்டாவது மெயின் சாலை, ATC சாலை முதலிய இடங்களில் உள்ள குப்பைகளை அகற்றும் தூய்மை பணியை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டல அலுவலர் திரு.ஆர்.பாலசுப்பிரமணியன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர்.டி.ஜி.சீனிவாசன், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**